மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்று முதல் இருபத்து ஐந்து வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

3. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*